بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *15/11/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தொடர்பான குறிப்பை இன்று நான் ஆரம்பிப்பேன். ஹுதைபியா சமாதான உடன்படிக்கை துல்கஅதா மாதம் ஹிஜ்ரீ 6 இல் அதாவது, கி.பி 628 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிகழ்ந்தது. இது ஹுதைபியா போர் நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது. ஹுதைபியா போர் நடவடிக்கையைக் குறித்து சூரா ஃபத்ஹ் எனும் முழு அதிகாரத்தையே அல்லாஹ் இறக்கியுள்ளான். அந்த அதிகாரத்தின் அருளுக்குரிய ஆரம்ப வசனங்களில் அல்லாஹ் கூறுகின்றான்:

“நிச்சயமாக நாம் உமக்கு மிகத்தெளிவான வெற்றியினை வழங்கியுள்ளோம். இதன் விளைவாக உமது ஒவ்வொரு கடந்த கால மற்றும் எதிர் கால தடுமாற்றங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான். மேலும் உம் மீது தன் அருளை முழுமைப்படுத்தி உமக்கு நேரான வழியினைக் காட்டுவான். மேலும் அல்லாஹ் உமக்கு கண்ணியமிக்க, வல்லமைமிக்க உதவியைச் செய்வான்.”

ஹுதைபியா என்பது ஒரு கிணற்றின் பெயராக இருந்தது. இஸ்லாத்தின் துவக்க காலத்தில் இந்தக் கிணறு பயணிகளுக்கும், ஹாஜிகளுக்கும் பயன்பட்டு வந்தது. ஆனால் அங்கு எவ்வித குடியிருப்பும் இருக்கவில்லை. மக்காவில் இருந்து ஹுதைபியா 9 மைல் தூரத்தில் உள்ளது. மக்காவின் கண்ணியத்திற்குரிய பகுதியின் மேற்கு எல்லையாக ஹுதைபியா உள்ளது.

அறிவிப்புகள் மற்றும் வரலாற்றில் இருந்து தெரிய வருவதென்னவென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் ஹுதைபியா பயணத்தை மேற்கொண்டார்கள். அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கனவில், அன்னார் தம் தோழர்களுடன் அமைதியான சூழலில் தம் தலையை மழித்த நிலையிலும், முடிகளைக் கத்தரித்த நிலையிலும் மக்காவில் நுழைகிறார்கள் என்றும், அன்னார் பைத்துல்லாஹ்வுக்குள் நுழைகிறார்கள் என்றும், அதன் திறவுகோலை வாங்கிக் கொண்டார்கள் என்றும், அரஃபா மைதானத்தில் தங்கியிருந்தவர்களுடன் அன்னாரும் தங்கியிருக்கிறார்கள் என்றும் காட்டப்பட்டது.

இந்தக் கனவின் அடிப்படையில் அன்னார் அரேபிய மக்களையும் சுற்றுவட்டாரங்களில் இருந்த காட்டரபிகளையும் அழைத்து அனைவரையும் தம்முடன் செல்லுமாறு கூறினார்கள். இந்தப் பயணத்தில் முஸ்லிம்களிடத்தில் உறையில் இடப்பட்டிருந்த வாள்களைத் தவிர வேறு எந்த ஆயுதமும் இருக்கவில்லை. அக்காலத்தில் தம் வீடுகளை விட்டு வெளியே செல்லும்போது ஒவ்வொருவரும் தம்மிடத்தில் வாளை வைத்திருப்பார். வாளுடன் புறப்பட்டுச் செல்லக் கூடியவர் கண்டிப்பாக போரிடத்தான் செல்கிறார் என்று ஒருபோதும் கருதப்பட்டதில்லை. ஆயுதங்கள் உடன் எடுத்துச் செல்லாததைக் குறித்து ஹஸ்ரத் உமர்

(ரலி) அவர்கள் கேட்டபோது அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் உம்ராவுக்கான எண்ணத்தில் செல்கிறேன். ஆகவே என்னுடன் ஆயுதங்களை எடுத்துச் செல்வதை விரும்பவில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய இக்கனவை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இக்கனவைக் கண்ட பிறகு உம்ராவுக்காக ஆயத்தமாகும்படி தம் சஹாபிகளிடத்தில் கூறினார்கள்.

உம்ரா என்பது ஒரு சிறியவகை ஹஜ் ஆகும். ஹஜ்ஜில் செய்யப்படுகின்ற சில இறை வணக்கங்கள் இதில் செய்யப்படாமல் பைத்துல்லாஹ்வை வலம் வருவது, குர்பானி கொடுப்பது ஆகியவை மட்டுமே போதுமானதாகக் கருதப்படுகிறது. இந்த இபாதத்திற்கென்று குறிப்பிட்ட காலகட்டம் ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை. எந்த காலகட்டத்திலும், எந்தப் பருவ நிலையிலும் இந்த இபாதத்தை நிறைவேற்றலாம்.

ஹுதைபியா போர் நடவடிக்கையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை என்னவாக இருந்தது என்பது தொடர்பாக கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஆயிரத்திலிருந்து 1700 வரை எண்ணிக்கை இருந்ததாக பல்வேறு அறிவிப்புகள் கூறுகின்றன.

இந்தப் பயணத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் தூய துணைவியார் ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்கள் அன்னாருடன் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் துல்கஅதா மாதத்தின் துவக்கத்தில் திங்கள் கிழமையன்று புறப்பட்டார்கள். ஸுல் ஹுலைஃபா (என்ற இடத்தை) சென்றடைந்த பிறகு அங்கு லுஹர் தொழுதார்கள். பிறகு குர்பானியுடைய கால்நடைகளைக் கொண்டு வரச் செய்தார்கள். அவற்றின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. அவற்றிற்கு மாலை இடப்பட்டது. பிறகு அன்னார் (சில) ஒட்டகங்களின் திமிலில் அடையாளமிட்டார்கள். மற்ற கால்நடைகளின் மீது ஹஸ்ரத் நாஜியா (ரலி) அவர்கள் அடையாளமிட்டார்கள். அந்தப் பயணத்தில் முஸ்லிம்களிடத்தில் 200 குதிரைகள் இருந்தன.

குரைஷியர்களின் நிலையை அறிந்து வருவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் ஓர் உளவாளியை முன்னால் அனுப்பி வைத்தார்கள். அத்துடன் மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 20 குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு குழுவையும் முன்னால் அனுப்பி வைத்தார்கள். அன்னார் ரவ்ஹா என்ற இடத்தை அடைந்த போது கைக்கா என்ற பள்ளத்தாக்கில் சில முஷ்ரிக்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் திடீரென்று முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்றும் அன்னாருக்கு செய்தி கிடைத்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்திராத ஹஸ்ரத் அபூ கதாதா அன்சாரி (ரலி) அவர்களை ஸஹாபிகளின் ஒரு குழுவுடன் அங்கு அனுப்பி வைத்தார்கள்.

இந்தப் பயணத்தின் போது ஓரிடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களைச் சுற்றியும் மக்கள் கூடியிருந்தார்கள். அப்போது அன்னாருக்கு முன்னால் ஒரு தண்ணீர் பாத்திரம் இருந்தது. அதிலிருந்து அன்னார் உளூ செய்து கொண்டிருந்தார்கள். மக்களைப் பார்த்து, என்ன விஷயம் என்று கேட்டார்கள். சஹாபிகள் அன்னாரிடம், தங்களிடத்தில் இந்தப் பாத்திரத்தில் இருக்கும் நீரைத் தவிர எங்களிடத்தில் எவரிடமும் குடிக்கவோ, உளூ செய்யவோ நீர் இல்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட அன்னார் அந்தப் பாத்திரத்தில் தம் கையை இட்டார்கள். அப்போது அன்னாருடைய விரல்களின் நடுவில் இருந்து நீரூற்றைப் போன்று தண்ணீர் பொங்கி வர ஆரம்பித்தது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் அனைவரும் அந்த நீரை அருந்தினோம்; உளூ செய்தோம். நாங்கள் எண்ணிக்கையில் ஒரு லட்சம் பேர் இருந்திருந்தாலும் எங்களுக்கு அந்தத் தண்ணீர் போதுமானதாக இருந்திருக்கும்.

இச்சம்பவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அற்புதங்கள் தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்: “லி(க்)கா அதாவது, இறை சந்திப்பு எனும் அந்தஸ்தில் சில சமயங்களில் மனிதன் மூலமாக எவ்வாறான விஷயங்கள் வெளிப்படுகின்றனவென்றால் அவை மனித ஆற்றல்களுக்கு மேலானதாகத் தெரிகின்றன. அவை இறை ஆற்றல்களின் பண்பைத்

தமக்குள் வைத்திருக்கின்றன. பல அற்புதங்களை பெருமானார் (ஸல்) அவர்கள் தனிப்பட்ட ஆற்றலின் மூலமாகக் காட்டி இருக்கிறார்கள். அவற்றுடன் எந்த துஆவும் இருக்கவில்லை.”

முஸ்லிம்கள் போருக்காக மக்காவுக்குப் புறப்படவில்லை; மாறாக பைத்துல்லாஹ்வை தரிசிப்பதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள் என்று குரைஷியர்களுக்குத் தெரிய வந்த உடனேயே அவர்கள் முஸ்லிம்களை மக்காவுக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். குரைஷியர்கள் போருக்காக மிகப் பெரும் படையை ஆயத்தம் செய்துள்ளார்கள் என்றும், அவர்கள் பைத்துல்லாஹ்வுக்குள் நுழைய விடாமல் தம்மைத் தடுக்கவுள்ளார்கள் என்றும் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கிடைத்தது. இதைக் கேட்டவுடனேயே அன்னார் மக்களிடம் ஆலோசனை கேட்ட பிறகு பைத்துல்லாஹ்வை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவின் பள்ளத்தாக்கை அடைந்த போது பெருமானார் (ஸல்) அவர்களின் பெண் ஒட்டகம் ‘கஸ்வா’ அமர்ந்து விட்டது. அதை எழுப்ப முயற்சி செய்த போதிலும் அது எழவில்லை. கஸ்வா (எனும்) இந்த ஒட்டகம் பிடிவாதம் பிடிக்கிறது என்று அன்னாரிடம் மக்கள் கூறினார்கள். கஸ்வா பிடிவாதம் பிடிக்கக் கூடியதும் கிடையாது; இது அதனுடைய குணமும் கிடையாது. மாறாக யானைகளைத் தடுத்து நிறுத்திய தூய இறைவன் அதாவது அல்லாஹ் இதைத் தடுத்து நிறுத்தியுள்ளான் என்று அன்னார் கூறினார்கள். என் உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் புனித(த் தல)ங்களை கண்ணியப்படுத்து தொடர்பாக குரைஷிகள் எதை விரும்பினாலும் நான் அவர்களுக்கு அதைக் கண்டிப்பாகக் கொடுப்பேன் என்று அன்னார் கூறினார்கள். அதற்குப் பிறகு அன்னார் ஒட்டகத்தை அதட்டியபோது அது எழுந்து நின்றது.

ஹுதைபியாவில் சிறிதளவே தண்ணீர் இருந்த எந்தத் தடாகத்திற்கு அருகில் முஸ்லிம்கள் முகாமிட்டிருந்தார்களோ அதிலிருந்து மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் எடுக்க ஆரம்பித்தார்கள். கொஞ்ச நேரத்திலேயே அது காலியாகிவிட்டது. ஹஸ்ரத் நாஜியா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: தண்ணீர் தட்டுப்பாடு பற்றிய முறையீடு செய்யப்பட்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் என்னை அழைத்து தம் அம்புக்கூட்டிலிருந்து ஓர் அம்பை எடுத்து எனக்குக் கொடுத்தார்கள். பிறகு ஒரு குவளையில் நீரூற்றினுடைய தண்ணீரைக் கொண்டு வரச்செய்தார்கள். அன்னார் உளூ செய்தார்கள். பிறகு வாய் கொப்பளித்து அதை அந்தக் குவளையில் உமிழ்ந்தார்கள். பிறகு என்னிடம், இந்தக் குவளையில் உள்ள நீரை வற்றிப்போன நீரூற்றில் ஊற்றி அந்தத் தண்ணீரில் அம்பை நிறுத்தி வையுங்கள் என்று கூறினார்கள். நான் அவ்வாறே செய்தேன். பெருமானார் (ஸல்) அவர்களை உண்மையுடன் அனுப்பி வைத்த இறைவன் மீது ஆணையாக! நான் மிகவும் கஷ்டப்பட்டுதான் அந்தத் தடாகத்தை விட்டு வெளியே வந்தேன். தண்ணீர் நாலாப்புறமும் என்னைச் சுற்றிக் கொண்டது. கொதிக்கின்ற பாத்திரத்தைப் போன்று தண்ணீர் பொங்கிக் கொண்டிருந்தது. எந்த அளவுக்கென்றால் தண்ணீர் மட்டம் உயர்ந்து கரையோரம் வரை அது நிரம்பி விட்டது. மக்கள் அதன் கரையில் நின்று கொண்டு தண்ணீரை நிரப்ப ஆரம்பித்தார்கள். எந்த அளவுக்கு என்றால் கடைசி நபருடைய தாகமும் தீர்ந்துவிட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் மழை பெய்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் கூறுகிறார்கள்: அதே இரவில் மழையும் பெய்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக வருகை தந்த போது மைதானம் நனைந்திருந்தது. அன்னார் சஹாபிகளைப் பார்த்து புன்சிரித்தவாறு, இந்த மழையின் போது உங்களுடைய இறைவன் என்ன கூறினான் என்று நீங்கள் அறிவீர்களா என்று கேட்டார்கள். சஹாபிகள் வழக்கம் போல், இறைவனும் அவனுடைய தூதருமே நன்கு அறிவார்கள் என்று கூறினார்கள். அன்னார் கூறினார்கள்: இறைவன் என்ன கூறினான் என்றால், என்னுடைய அடியார்களில் சிலர் இந்த (விடியல்) காலையை உண்மையான ஈமானுடன் கண்டார்கள். ஆனால் சிலர் குஃப்ரில் விழுந்து தடுமாறி விட்டார்கள். ஏனென்றால் நம் மீது இறை அருளாலும் கருணையாலும் மழை பெய்தது என்று எவர் கூறினாரோ அவர் ஈமானில் நிலைத்திருந்தார். ஆனால் இந்த மழை இன்னின்ன நட்சத்திரங்களின் தாக்கத்தின் விளைவாக

பெய்தது என்று எவர் கூறினாரோ அவர் சூரிய, சந்திரன் மீது நம்பிக்கை கொண்டவராகி விட்டார்தான்! ஆனால், இறைவனுக்கு குஃப்ர் செய்து விட்டார் என்று கூறினார்கள்.

ஏகத்துவச் செல்வத்தால் நிறைந்திருக்கின்ற இந்த வழிகாட்டலை வழங்கிய அதே வேளையில் பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு இன்னொரு பாடத்தையும் கற்றுக் கொடுத்தார்கள். அது என்னவென்றால், சந்தேகத்திற்கிடமின்றி காரணிகள் மூலமாகவே இறைவன் இந்தப் பிரபஞ்சத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றான். அதற்காக பல்வேறு வகையான காரணிகளை அவன் நிர்ணயித்துள்ளான். மழை போன்றவிஷயங்களுக்கு நட்சத்திரங்களின் தாக்கம் இருப்பதை நாம் மறுக்க முடியாதுதான்! ஆனால் உண்மையான ஏகத்துவம் என்பது இடையில் காரணிகள் இருந்தாலும் மனிதனுடைய பார்வை மறைவிலும் மறைவான இறைவனை விட்டு விலகி விடாமல் இருத்தலே ஆகும். அல்லாஹ் காரணிகளைக் கொடுத்துள்ளான்தான்! ஆனால் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்பவே அந்தக் காரணிகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. அவனே இந்த அனைத்துக் காரணிகளையும் படைத்திருக்கின்றான்; அவனே இந்தப் பிரபஞ்சத்தில் காரணிகள் உருவாக காரணமாகவும் உள்ளான். அவன் இன்றி இந்த வெளிப்படையான காரணிகள் இறந்து போன ஒரு பூச்சியேயன்றி வேறு ஒன்றும் கிடையாது.

ஹுதைபியா தொடர்பான விபரங்கள் இன்னும் உள்ளன. இனி வரக்கூடிய காலத்தில் எடுத்துக் கூறப்படும் இன்ஷா அல்லாஹ். இப்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பையும் எடுத்துரைப்பேன். தொழுகைக்குப் பிறகு ஜனாஸாவும் தொழ வைப்பேன்.

**முதல் குறிப்பு, அன்பிற்குரிய ஷஹர்யார் ரக்கீன் ஷஹீது** அவர்களைப் பற்றியதாகும். இவர் பங்களாதேஷைச் சார்ந்த முஹம்மது அப்துல்லாஹ் வஹ்ஹாப் சாஹிப் அவர்களின் மகன் ஆவார்.

ஆகஸ்ட் 5 ஆம் தேதி அரசாங்கம் கவிழ்ந்ததற்குப் பிறகு பங்களாதேஷில் கடந்த நாட்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அரசாங்கம் கவிழ்ந்த பிறகு நாட்டில் பிரிவினைவாதம் பரவி விட்டது. அஹ்மதிய்யத்தின் எதிரிகள் இதிலிருந்து பயனடைந்தவாறு அஹ்மது நகர் ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். எதிரிகள் அஹ்மதிகளின் வீடுகளை எரித்தவாறு, பள்ளிவாசலில் நெருப்பு மூட்டிய பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யா மற்றும் மாநாடு நடக்கும் இடத்தை நோக்கி முன்னேறினார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நுழைவதில் அவர்கள் வெற்றி பெற முடியவில்லைதான்! ஆனால் மாநாடு நடக்கும் இடத்தின் பின்புறத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காதிம்களை அவர்கள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்திக் கொண்டே சென்றார்கள். அப்போது அன்பர் ஷஹர்யார் அவர்களின் தலையில் கடுமையான காயம் ஏற்பட்டது. மூன்று மாதங்களாக சிகிச்சையில் இருந்த பிறகு இறுதியில் நவம்பர் 8 ஆம் தேதி 16 வயதில் அவர்கள் ஷஹீது ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இவ்வாறு இவர்கள் ஷஹாதத் எனும் அந்தஸ்தை அடைந்து விட்டார்கள். அன்பிற்குரிய ஷஹர்யார் அவர்கள் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருந்தார்கள். பின் விட்டு சென்றவர்களுள், பெற்றோர், பாட்டனார், பாட்டி, ஒரு சகோதரி மற்றும் இரு சகோதரர்கள் உள்ளார்கள்.

**இரண்டாவது நற்குறிப்பு கபாபீரைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் அசது ஒதே சாஹிப்** அவர்களைப் பற்றியதாகும். மர்ஹூம் மிகப்பெரும் எழுத்தாளராக இருந்துள்ளார்கள். மிகவும் கலப்பற்ற மனிதராகவும், அஹ்மதியத்திற்காக தன்மானம் கொண்டவராகவும், ஜமாஅத்தின் உண்மையான தொண்டராகவும் திகழ்ந்துள்ளார்கள்.

*ஹுஸூர் அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் உயர் அந்தஸ்துக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)